**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-4** |
| Name | : | **ராஜேந்திரன்** |
| Husband Name | : | **ரங்கசாமி** |
| Age | : | **54** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.01.2026.*

**முதல் விசாரணை**

1. நான் தற்போது குன்னத்தூரில் வசித்து வருகிறேன். நான் ஒர்க் ஷாப்பிற்கு வேலைக்கு சென்று வருகிறேன். எனது வீடு குன்னத்தூர் - ஆதியூர் ரோட்டில் உள்ள ராகவேந்திரா மண்டபத்திற்கு பின்புறம் உள்ளது. கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை 09.15 மணியளவில் நான் வீட்டில் இருந்து வெளியே வந்த போது சின்னையன் கவுண்டன் வலசு ரோட்டில் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்த போது எனக்குத் தெரிந்த பூங்கொடி அங்கு அழுது கொண்டு இருந்தார். அவரது செயினை யாரோ அருத்து விட்டதாக சொன்னார். போலீசார் அந்த இடத்திற்கு காலை 10 மணிக்கு வந்தார்கள்.

2. போலீசாருக்கு அந்த இடத்தை பூங்கொடி அடையாளம் காட்ட, அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விவரம் எழுதி என்னிடமும் குணசேகரன் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் பார்வை மகஜரில் அருகே

இருக்கும் இடங்கள் பற்றிய குறிப்பு இருந்தது. **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எனக்கு புகார்தாரர் பூங்கொடியை சுமார் 40-50 ஆண்டுகளாக தெரியும். நான் வீட்டில் இருந்து வந்தபோது என்னுடன் குணசேகரனும் வந்தாரா என்றால் இல்லை. நான் முப்பட்டில் தனியாக தான் வந்தேன். சம்பவம் நடந்த சமயத்தில் யார் யாருடன் பூங்கொடி அங்கு வந்தார் என்றால் நான் அதை பார்க்கவில்லை. அங்கே எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை, காவல் உதவி ஆய்வாளர் அங்கே இருந்தார். போலீசார் என்னை அதே இடத்தில் தான் விசாரித்தார்கள். நான் கூறிய விவரங்களை போலீசார் எழுதிக் கொண்டார்கள்.

2. சம்பவ இடத்தில் டீ கடைகள் இல்லை, டீக்கடை மெயின் ரோட்டில் தான் உள்ளது. என்னை விசாரித்த போது அருகே இருந்தவர்கள் எதற்காக என்னை போலீசார் விசாரித்தார்கள் என்று ஏதேனும் கேட்டார்களா என்றால் இல்லை. சம்பவம் இடத்திலிருந்து எனது வீடு சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ளது. நான் கையொப்பம் செய்த தாளில் முழுமையாக என்ன விவரம் இருந்தது என்பது தெரியுமா என்றால் தெரியாது, அருகே என்ன இருந்தது என்று எழுதி இருந்தது. படம் வரைந்து எழுதப்பட்டது என்றாலும் அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றாலும் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் கதவு எண் மற்றும் மின்கம்பம்

பற்றி ஏதேனும் குறிப்பு இருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை.

3. நான் கையொப்பம் செய்த தாளில் அந்த இடம் எத்தகைய இடம், எத்தகைய சாலை போன்ற விவரங்கள் இருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்து சுமார் 100 அடி தொலைவில் வனிதா என்பவரின் வீட்டில் சி சி டிவி கேமராக்கள் உள்ளது. நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் அருகே இருந்த வீட்டின் தன்மைகள் ஓட்டு வீடா அல்லது தார்ஸ் வீடா என்பது பற்றி குறிப்பு இருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையம் செல்லவில்லை. போலீசார் என்னை 08.07.2025 ஆம் தேதி விசாரித்தார்கள். அன்றைய தினம் என்ன கிழமை என்றால் தெரியாது. நான் உண்மையில் அந்த இடத்தில் இருந்திருந்தால் மேற்படி விவரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் நான் போலீசார் கேட்டதன் பேரில் சாட்சியமளிக்கும் காரணத்தினால்தான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.22 15:38:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-5** |
| Name | : | **லோகநாதன்** |
| Father Name | : | **ராமசாமி** |
| Age | : | **42** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.01.2026.*

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சின்னையன் கவுண்டன் வலசில் வசித்து வருகிறேன். நான் அருகே கம்பெனிக்கு வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 11.07.2025 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் நான் பெருந்துறைக்கு சொந்த வேலையாக சென்றபோது, செம்மாண்டம் பாளையம் சோதனை சாவடியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தார்கள். எனக்கு முன்னால் நான்கைந்து பேர் வாகனத்தை நிறுத்தி இருந்தார்கள். போலீசார் என்னையும் சோதனை செய்தார்கள். அப்போது பெருந்துறையில் இருந்து R15 வாகனத்தில் இருவர் வந்தார்கள்.

2. அவர்கள் வாகனத்தை திருப்பிக் கொண்டு தப்பிக்க முயன்ற போது போலீசார் அவர்களை பிடித்துக் கொண்டார்கள். அவர்களை போலீசார் விசாரித்த போது 08.07.2025 ஆம் தேதி ஆதியூர் ரோட்டில் இரண்டு பவுன் செயினை ஒரு பெண்மணியிடம் பறித்ததாக சொன்னார்கள். அந்த செயின் பற்றி போலீசார் விசாரித்த போது, வடவள்ளியில் உள்ள கோனார் பைனான்ஸில் வைத்திருப்பதாகவும், அங்கு

அழைத்துச் செல்வதாகவும் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை போலீசார் தட்டச்சு செய்து கொண்டார்கள். அதில் நானும் நவீன் குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

3. போலீசார் பிடித்த இருவருள் ஒருவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார் **(சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார்).** மேலும் போலீசார் அதே இடத்தில் அவர்கள் போட்டிருந்த செப்பல், இருசக்கர வாகனம் மற்றும் பைனான்ஸ் ரசீது ஆகியவற்றை கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வெள்ளை நிற மற்றும் பிரவுன் நிற செப்பல்களை தான் போலீசார் கைப்பற்றினார்கள். **(மேற்படி செப்பல் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி பிரவுன் நிற செப்பலை ஆஜர் எதிரி தான் அணிந்திருந்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனத்தை தான் போலீசார் கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கோனார் பைனான்ஸ் ரசீதும் போலீசார் அந்த இடத்தில் கைப்பற்றியதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.5 இன் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு, எனக்கு பெருந்துறையில் அவசர வேலை இருந்ததால் நான் சென்று விட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு பூங்கொடி மற்றும் நவீன் குமாரை தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தினம் அந்த இடத்திற்கு நான் தான் முதலில் சென்றேன் அதன் பின்பு தான் எனது நண்பர் நவீன் குமார் வந்தார். நான் அன்றைய தினம் குன்னத்தூரில் இருந்து பெருந்துறையை நோக்கி வந்து கொண்டிருந்தேன், அப்போது போலீசார் செம்மாண்டம்பாளையம் சோதனைச் சாவடியில் எனக்கு வலது புறத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

2. எனது வாகனத்தை தணிக்கை செய்த போது அவர்களது குறிப்பேட்டில் எனது வாகனத்தின் பதிவு எண்ணை போலீசார் குறித்து கொண்டார்களா என்றால் இல்லை. நான் அந்த இடத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்திருப்பேன். அந்த இடத்தில் சீருடையில் நான்கு போலீசாரும், சாதாரண உடையில் ஒரு போலீசாரும் இருந்தார்கள். போலீசார் என்னை சோதனைச் சாவடி மையத்திற்கு முன்பாகதான் நிறுத்தினார்கள். என்னையும், எனது நண்பரையும் விசாரித்தது, சோதனை சாவடியில் உள்ள கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்தில் எத்தகைய கடைகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சாலையில் நடுவே திண்டு உள்ளதா என்றால் ஓரமாக உள்ளது, நடுவே டிவைடர் உள்ளது. சம்பவம் இடத்திலிருந்து எனது நண்பர் எப்போது கிளம்பினார் என்றால் தெரியாது. நான் புறப்படுவதற்கு முன்பாகவே கிளம்பிவிட்டாரா என்றால் தெரியாது. போலீசார் சோதனை சாவடிக்குள் வைத்து தட்டச்சு செய்தார்கள், அதில் தான் நான்

கையொப்பம் செய்தேன். சோதனை சாவடிக்குள் கம்ப்யூட்டர் இருந்ததா அல்லது லேப்டாப் இருந்ததா என்றால் கம்ப்யூட்டர் இருந்தது. நான் அந்த கம்ப்யூட்டரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதன் நிறம் தெரியுமா என்றால் தெரியாது.

4. நானும், எனது நண்பரும் கையொப்பம் செய்த தாளில் முழுமையாக என்ன விவரம் இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் தெரியாது. நான் சோதனை சாவடியில் வைத்து மூன்று கையொப்பங்கள் செய்தேன். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலீசார் வீடியோ பதிவு செய்தார்களா என்றால் தெரியாது. ஒன்றாம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் தெரியாது. இரண்டாம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் தெரியாது. அந்த இடத்தில் இந்த வழக்கின் எதிரிகள் ஏதேனும் கையொப்பம் செய்தார்களா என்றால் தெரியாது.

5. போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். போலீசாரின் விசாரணையின் போது நான் எந்த அவசர வேலைக்காக அந்த வழியே பெருந்துறைக்கு சென்றேன் என்பதை கூறினேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையின் போது அந்த நபர்கள் வந்த வாகனத்தின் பதிவு எண் பற்றி கூறினேனா என்றால் வெள்ளை மற்றும் பச்சை நிறம் கொண்ட R15 வாகனம், அதற்கு பதிவு எண் கிடையாது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வாகனத்தின் பதிவு எண் இல்லை என்று சொல்லி தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் 2021, 2023 ஆண்டில் என்ன குற்றத்தில் ஈடுபட்டார்கள் என்று கூறினார்களா என்றால் தெரியாது.

6. எதிரிகள் மேற்படி R15 வாகனம் யாருடைய வாகனம், எங்கிருந்து அதனை வாங்கி வந்தார்கள் போன்ற விவரத்தினை ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார்களா என்றால் தெரியாது. கைப்பற்றிய வாகனத்தை போலீசார் அங்கிருந்து எப்போது, எங்கு எடுத்துச் சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடத்தில் போலீசார் எதிரிடமிருந்து செப்பல், வண்டி மற்றும் ரசீதை கைப்பற்றினார்கள். அந்த ரசீதை கைப்பற்றியவுடன் போலீசார் மற்றும் எதிரி எங்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் போலீசாரை ஏதேனும் கடைக்கு அழைத்துச் சென்றார்களா என்றால் தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.22 15:38:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-6** |
| Name | : | **ரத்தினகுமார்** |
| Father Name | : | **குணசேகரன்** |
| Age | : | **27** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22 .01.2026.*

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெள்ளக்கோவிலில் வசித்து வருகிறேன். நான் தறி வைத்துள்ளேன். கடந்த 07.07.2025 ஆம் தேதி நான் எனது யமஹா ஆர்15 TN 42 AZ 1550 என்ற பதிவு எண் கொண்ட எனது வீட்டின் போர்டிகோவில் இரவு நிறுத்திவிட்டு சென்று விட்டேன், மறுநாள் காலை 7:30 மணியளவில் பார்த்தபோது வாகனத்தை காணவில்லை. அதனால் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன்.

2. கடந்த 11.07.2025 ஆம் தேதி குன்னத்தூர் காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து வாகனத்தின் பதிவு சான்று கொண்டு வருமாறு சொன்னார்கள். நான் அங்கே சென்றபோது வாகனத்தின் சேஸ் நம்பரை சரிபார்த்து அங்கே இருந்த R15 வாகனம் எனது வாகனம் என்று உறுதி செய்தார்கள். நான் அந்த வாகனத்தை

இந்த நீதிமன்றத்தில் மனுசெய்து பெற்றுக் கொண்டேன். அந்த வாகனத்தை நீதிமன்றத்தில் பெற்றபோது புகைப்படங்களைத் தாக்கல் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த புகைப்படங்கள் தான். அதில் உள்ள வாகனம் களவுப் போய் மீட்கப்பட்ட எனது வாகனமாகும். **(மேற்படி புகைப்படங்கள் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது வாகனம் நகை பறிப்பில் பயன்படுத்தப்பட்டதாக சொன்னார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் ஒரு பைக் மற்றும் ஒரு ஸ்கூட்டி உள்ளது. அன்றைய தினம் எனது வீட்டில் இரண்டு வாகனங்களும் இருந்தது. எனது வீட்டிற்கு கேட் கிடையாது. எனது வீட்டில் சிசிடிவி கேமரா இல்லை. நான் குடியிருக்கும் பகுதியில் கேமரா உள்ளதா என்றால் தெரியாது. நான் புகார் கொடுத்த பின்பும் வாகனத்தை தேடிக் கொண்டுதான் இருந்தேன். குன்னத்தூர் போலீசார் அழைத்தபோது மணி எவ்வளவு இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. நான் காவல் நிலையம் சென்று எனது வாகனத்தை பார்த்தபோது அதனை திருடிய நபர்களையும் பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு பூங்கொடியை தெரியாது. கடந்த 11.07.2025 ஆம் தேதி நான் ஒரு மணி அளவில் எங்கே என்ன செய்து கொண்டு இருந்தேன் என்றால் அன்றைய தினம் முழுவதும் எனது வாகனம் சம்பந்தமாக தான் காவல் நிலையத்திற்கு அலைந்து கொண்டிருந்தேன். எனது வாகனத்தை வெள்ளகோவில் போலீசாரும் தேடிக் கொண்டுதான் இருந்தார்கள், நானும் உடன் சேர்ந்து உதவியாக தேடிக் கொண்டுதான் இருந்தேன். நான் எனது வாகனத்தின்

சேஸ் நம்பரை போலீஸ் விசாரணையின் போது ஆர்சி புத்தகத்தை பார்த்து தான் குறிப்பிட்டேன். நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.22 15:38:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.